காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 புரட்டாதி 11 புதன்கிழமை 28.09.2022 கதிர் 325

### இனி இது ரகசியம் அல்ல!

ஜெனிவாவின் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலில் இலங்கை தொடர்பாக இம்முறை சமர்ப்பிக்கப்படவிருக்கும் பிரேரணையின் வடிவம் பெரும்பாலும் இறுதி செய்யப்பட்டு விட்டது.

அதனுடைய பிரதி ஒன்று நேற்றிரவு கிடைத்தது. ☞2

# உயர் பாதுகாப்பு வலய அறிவிப்பு வாபஸாகும்?

## விளைவுகளை எண்ணிப் பின்வாங்க அரசுத் தலைமை ஆலோசனையாம்

கொழும்பு, செப்ரெம்பர் 28

கொழும்பில் உயர்பாதுகாப்பு வலயங்களை அறிவிக்கும் வர்த்தமானி அறிவித்தலை இரத்துசெய்வது குறித்து ஆராயுமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சட்டமா அதிபருக்கு ஆலோசனை வழங்கியுள்ளார் எனத் தகவல்கள் வெளியாகின்றன. ☞10

## காலி முகத்திடலில் இனிமேல் வெடி கூட கொளுத்த முடியாது

### பேராசிரியர் பீரிஸின் கவலை இது



உயர் பாதுகாப்பு வலயம் என்கிற பெயரில் அரசாங்கம் கொழும்பில் இராணுவ முகாம்களை அமைத்துள்ளதாக ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் தவிசாளர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு ☞10

## இரண்டாவது மக்கள் எழுச்சி ஜே.வி.பியின் தலைமையில்!

### அதன் தலைவர் அனுரகுமார உறுதி



இரண்டாவது மக்கள் எழுச்சி தேசிய மக்கள் சக்தியின் தலைமைத்துவத்தின் கீழேயே உருவாகும் என்று ஜே.வி.பி தலைவர் அனுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

அகுரஸ்ஸ நகரில் நடைபெற்ற தேசிய மக்கள் சக்தியின் கூட்டமொன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இதனை தெரிவித்துள்ளார்.


அதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில் – ☞2

## அரச அதிகாரிகள் கருத்து வெளியிட தடை விதிப்பு

சமூக வலைதளங்களில் கருத்துக்களை வெளியிடுவது குறித்து அரச அதிகாரிகளுக்கு சுற்றறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

04/2015 பொது நிர்வாக சுற்றறிக்கையின் பிரிவு 03 இல் குறிப்பிடப்பட்டுள்ளபடி, நிறுவன சட்ட விதிகளை பின்பற்றாமல் அரசாங்க ☞2

## தெமட்டகொடவில் கட்டடத்தை இடித்துச் சேதப்படுத்திய ரயில்!



கொழும்பு, செப். 28

கொழும்பு தெமட்டகொட தளத்தில் பயணித்த ரயில் ஒன்று அங்கிருந்த பழைய கட்டடம் ஒன்றின் மீது மோதியதில் பலத்த சேதம் ஏற்பட்டுள்ளது. ☞10

## வவுனியாவிற்கு நேற்று நாமல் திடீர் விஜயம்





சிறிலங்கா பொதுஜன பெரமுனவின் முக்கிய உறுப்பினரும், முன்னாள் அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான நாமல் ராஜபக்ஷ வவுனியாவிற்கு நேற்று வருகை தந்து கிராமிய அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் மஸ்தான் ஏற்பாடு செய்த சந்திப்புக்களில் கலந்துகொண்டார்.

நேற்று வவுனியா ☞2

## உயர் பாதுகாப்பு வலயப் பிரகடனத்துக்கு மனித உரிமைகள் ஆணையம் கண்டனம்

கொழும்பு,செப்.28

உத்தியோகபூர்வ இரகசிய சட்டத்தின் கீழ் அதியுயர் பாதுகாப்பு வலயங்கள் பிரகடனப்படுத்தியமை எந்த நியாயமும் அடிப்படையும் இல்லாதது என இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

உத்தியோகபூர்வ இரகசியச் சட்டத்தை ஏற்றுக்கொள்வதற்கும், நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளை முற்றிலும் மீறும் பிரகடனத்தை வெளியிடுவதற்குமான ☞2

ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිසම
Human Rights Commission of Sri Lanka

## இன்றைய மின்வெட்டு




இன்று 2 மணித்தியாலம் 20 நிமிடம் மின்வெட்டை ☞2

## போராட்டங்களை இரும்புக்கரம் கொண்டு அடக்க அரச உயர்மட்டம் தீர்க்கமான முடிவு

### கமல் குணரத்ன, தேசபந்து தென்னகோன் போன்றோர் தீவிரமாம்



கொழும்பு,செப்.28

தற்போதைய அரசாங்கம் புதிய சட்டங்களைப் பயன்படுத்தி வெகுஜன ஊடகங்களையும் மக்கள் போராட்டங்களையும் தீவிரமாக நசுக்கத் தயாராகி வருவதாக நாட்டின் பிரபல தொழிற்சங்கத் தலைவர் எச்சரிக்கிறார்.

ஊடகங்களைக் கட்டுப்படுத்த ஊடகவியலாளர்களுக்கான அதிகார சபையொன்றை நியமிக்க அமைச்சரவை தீர்மானம் எடுத்துள்ளது என்றும் கூறப்படுகின்றது. ☞2

## யாழ். முதல்வர் எதேச்சாதிகார நடவடிக்கை என்று குற்றஞ்சாட்டி உறுப்பினர்கள் கூட்டாக வெளிநடப்பு!

### கோரமின்றி சபைக் கூட்டம் ஒத்திவைப்பு

யாழ்ப்பாணம், செப்.28

யாழ்ப்பாண மாநகர சபையில் சபை நடவடிக்கைகளில் சபை உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்தாமல் நடந்த சம்பவங்களுக்கு எதிர்ப்புத் தெரிவித்து தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் மணிவண்ணன் அணி உறுப்பினர்களைத் தவிர ஏனைய சகல உறுப்பினர்களும் ஒன்றாக வெளிநடப்புச் செய்தனர்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் மாதாந்த அமர்வு நேற்றைய தினம் மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தலைமையில் இடம்பெற்றபோதே அனைத்துக் கட்சி உறுப்பினர்களும் வெளிநடப்புச் செய்தனர்.

இவ்வாறு உறுப்பினர்கள் வெளியேறியமையை அடுத்து போதிய கோரம் இல்லாத காரணத்தினால் சபை அமர்வும் ஒத்திவைக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு ☞2

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இறுதிசெய்யப்பட்டபிரேரணைவடிவம் பெரும்பாலும் இன்று உத்தியோகபூர்வமாக கவுன்ஸில் அலுவலகத்தில் ஒப்படைக்கப்படும் என்று ஜெனிவாத் தகவல்கள் மூலம் அறியவந்தது. பெரும்பாலும் அக்டோபர் ஆறு அல்லது ஏழாம் திகதிகளில் இந்தப் பிரேரணை மீதான விவாதமும் வாக்கெடுப்பும் இடம்பெறும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

பிரேரணையைச் சமர்ப்பித்துள்ள இங்கிலாந்து, கனடா, ஜேர்மனி போன்ற இணை அனுசரணை நாடுகளும், அதற்கு ஆதரவளிக்கும் அமெரிக்கா போன்றவையும் கவுன்ஸிலில் உள்ள 47 வாக்களிக்கும் உறுப்பினர்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் பிரேரணையை ஆதரிப்பார்கள் என்று நம்புகின்றன.

குறிப்பாக ஜப்பான், பிரேஸில் போன்றவையும் இந்தப் பிரேரணைக்கு ஆதரவாக வாக்களித்து, இலங்கைக்கு எதிரான சர்வதேச நிலைப்பாட்டை உறுதிப்படுத்தும் என மேற்சொன்ன நாடுகள் நம்புகின்றன.

பெரும்பாலும் முன்னர் - இரண்டு ஆண்டுகளுக்கு முன்னர் - நிறைவேற்றப்பட்ட 46/01 தீர்மானத்தில் இருந்த விடயங்களே இப்போதைய 51 /01 பிரேரணையிலும் இடம்பெற்றிருக்கின்றன. இம்முறை அதிகார பரவலாக்கலை வலியுறுத்தல், பொருளாதாரக் குற்றங்கள் போன்ற விடயங்களும் பிரேரணையில் இடம் பெற்று இருக்கின்றன.

46/01 தீர்மானத்தின் பெறுபேறாக இலங்கை அரசு மீது பெரிய அழுத்தங்கள் வரவில்லை என்பதால், இப்போதைய 51/01 பிரேரணையும் தீர்மானமாக நிறைவேற்றப்பட்டால், அது ஒன்றும் இலங்கையைப் பெரும் நெருக்கடியில் ஆழ்த்தி விடப் போவதில்லை என்று கொழும்புத் தரப்பில் ஒரு கருத்து உள்ளது.

ஆனால் இப்போது பொருளாதார நெருக்கடியில் விழுந்து கிடக்கும் இலங்கைக்கு அதிலிருந்து மீளுவதற்கான முயற்சிகளுக்குப் பலத்த பின்னடைவை வரும் ஆறு அல்லது ஏழாம் திகதி ஜெனிவாவில் நிறைவேற்றப்படப் போகின்ற பிரேரணை கொண்டு வரும் என விடயமறிந்த வட்டாரங்கள் கூறுகின்றன.

யுத்த காலக் குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமைமீறல்கள் தொடர்பில் இப்போதைய பிரேரணை தீர்மானமாக நிறைவேற்றப்பட்ட பின்னர் பல காத்திரமான நடவடிக்கைகளை மேற்கு நாடுகள் புதிதாக மேற்கொள்வதற்கான வாசலை இப்போதைய பிரேரணை திறக்கும் என்று விடயமறிந்த அந்த வட்டாரங்கள் மேலும் தெரிவித்தன.

அப்படியே ஏதும் நடந்தால்தான் தமிழர்களுக்கு மீட்சி.. நடக்குமா? ஆண்டவனுக்குத்தான் வெளிச்சம்..!

- மின்னல் -

## இன்றைய ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமுல்படுத்த இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழு மின்சார சபைக்கு அனுமதி வழங்கியுள்ளது.

அதன்படி, பிற்பகல் 01 மணி நேரமும் இரவில் 1 மணி நேரம் 20 நிமிடமும் மின்வெட்டு அமுப்படுத்தப்படவுள்ளது.

## இரண்டாவது மக்கள் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எங்களின் அரசாங்கத்தின் கீழ் அனைத்துத் தொழில் முயற்சியாளர்கள், தொழிற்துறையினர் மற்றும் முதலீட்டாளர்களுக்கு சிறந்த கௌரவத்துடன் பெறுமதி ஏற்படும். ஆனால் 'டீல்' காரர்களுக்கு இடமளிக்கப்படாது என்பதனை உறுதியாக கூறுகின்றோம்.

இப்போது எம்.பிக்களுக்கு மரண வீடுகள் உள்ளிட்ட எந்தவொரு நிகழ்வுக்கும் வர முடியாத நிலைமையே காணப்படுகின்றது. இவ்வளவு காலமாக மக்களுக்கு அவர்களிடம் செல்ல முடியாது இருந்தது. இப்போது அவர்களுக்கு மக்களிடம் செல்ல முடியவில்லை. அப்படியாயின் பலம் மக்களிடமே உள்ளது. இதனால் பரந்து காணப்படும் பலத்தை ஒன்றிணைக்க வேண்டும். போராட்டத்தின் மூலம் கிடைக்க வேண்டிய உயர்ந்த வெற்றியை மக்களுக்கு பெற்றுக் கொள்ள முடியாது போயுள்ளது.

ஆனால் இரண்டாவது எழுச்சி தேசிய மக்கள் சக்தியின் தலைமைத்துவம் மற்றும் வழிநடத்தலின் கீழேயே ஏற்படும் என்பதனை நினைவில் கொள்ள வேண்டும். இதற்காக நாங்கள் ஒன்றிணைய வேண்டும். ஒவ்வொரு இடத்தில் கொடிகளை பிடித்துக்கொண்டு இருந்து பலனில்லை. தங்களின் கோபம், வேதனை ஆகியவற்றை அதன்மூலம் வெளிப்படுத்தலாம். ஆனால் பிரச்சினையில் இருந்து விடுபட வேண்டுமாயின் ஒன்றிணைந்த மக்கள் சக்தியை ஏற்படுத்த வேண்டும்.- என்றார்.

## அரச அதிகாரிகள் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகாரி சமூக ஊடகங்களில் கருத்து தெரிவிப்பது ஒழுக்காற்று நடவடிக்கைக்கு வழிவகுக்கும் குற்றமாகும் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

## உயர் பாதுகாப்பு ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசாங்கத்தின் அணுகுமுறை குறித்து ஆழ்ந்த கவலையடைவதாக ஆணைக்குழு சுட்டிக்காட்டியுள்ளது.

அதியுயர் பாதுகாப்பு வலயங்களைப் பிரகடனப்படுத்துவதற்கு அதிகாரப்பூர்வ இரகசியச் சட்டத்தை ஏற்க முடியாது என்பதை மீண்டும் வலியுறுத்துவதாகவும் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. சம்பந்தாப்பட்ட வர்த்தமானியை வாபஸ் பெறுமாறும் அரசாங்கத்தை ஆணைக்குழு வலியுறுத்தியுள்ளது.

தேசிய சட்டங்கள், ஏற்றுக்கொள்ளப்பட்ட சர்வதேச மற்றும் தேசிய மனித உரிமைகள் விதிமுறைகள் மற்றும் தரநிலைகளைப் பின்பற்றுவதை உறுதி செய்யவும், அந்த விதிமுறைகளை மீறும் அறிவிப்புகளைத் தடுக்கவும் நடவடிக்கை எடுக்குமாறும் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

## வவுனியாவிற்கு நேற்று ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அருந்ததி விருந்தினர் விடுதியில் இந்தச் சந்திப் புக்கள் இடம்பெற்றன. எனினும் சந் திப்புக்களை ஒட்டி ஊடகங்களுக்கும் அனுமதி வழங்கப்பட வில்லை.

இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தானின் ஏற்பாட்டில் பிரத்தியேகமாக அழைக்கப்பட்டவர்களுடன் இக்கலந்துரையாடல் இடம்பெற்றது.

## போராட்டங்களை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சமூக ஊடகங்கள் மற்றும் செய்தி இணையத்தளங்களில் எழுதுபவர்களை கண்காணித்து அவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க அரசாங்கம் தயாராக இருப்பதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச் செயலாளர் தெரிவித்துள்ளார்.

பல்வேறு சட்டங்கள் மூலம் அடக்குமுறையை அரசு கொண்டுவருகிறது என்பதை வலியுறுத்திய ஆசிரியர் சங்கத் தலைவர் ஜோசப் ஸ்டாலின், நாட்டு மக்களுக்கு பேச்சு சுதந்திரம் உள்ளதா எனக் கேள்வி எழுப்பியுள்ளார்.

கொழும்பில் பல இடங்கள் அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக ஜனாதிபதியினால் அறிவிக்கப்பட்டமை தொடர்பில் கருத்து தெரிவித்த சிரேஷ்ட தொழிற்சங்க தலைவர், தலைநகரில் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் அனைத்து இடங்களும் அதியுயர் பாதுகாப்பு வலயங்களுக்குள் உள்ளடக்கப்பட்டுள்ளன எனச் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொழும்பில் உள்ள அனைத்து முக்கிய போராட்ட மையங்களும் இதற்கு உட்பட்டுள்ளன. - என்றார் அவர்.

அரச இரகசிய சட்டத்தின் இரண்டாவது பிரிவின் கீழ் கொழும்பு மாவட்டத்தில் உள்ள எட்டு வலயங்களை அதியுயர் பாதுகாப்பு வலயங்களாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அறிவித்திருந்தார்.

பொலிஸ் மா அதிபர் அல்லது மேல் மாகாண சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபரின் முன் எழுத்துப்பூர்வ அனுமதியின்றி அவ்விடங்களில் பொதுக்கூட்டம் அல்லது எந்த விதமான செயற்பாடுகளும் நடாத்தப்படக் கூடாது என உரிய வர்த்தமானி அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்த உயர் பாதுகாப்பு வலயங்களில் ஊர்வலமோ, ஆர்ப்பாட்டமோ நடத்திக்கைதானால் உயர்நீதிமன்றத்தின் ஊடாகவே பிணைக்கு விண்ணப்பிக்க வேண்டுமென ஆசிரியர் சங்கத் தலைவர் ஜோசப் ஸ்டாலின் சுட்டிக் காட்டியுள்ளார்.

இதன் பின்னணியில் யார் இருக்கிறார்கள் என்பது எமக்குத் தெரியும். கமல் குணரத்ன, தேசபந்து தென்னகோன், இவர்கள் அனைவரும் ரணிலின் ஆசியுடன் இணைந்து செயற்படுகின்றனர். இந்த அடக்குமுறைக்குத் துணைச் சட்டங்களை உருவாக்குகின்றனர். இவை ஜனநாயக விரோதச் செயல்கள். - என்றார் அவர்.

போராட்டங்களை ஒடுக்கும் அரசாங்கம், மறுபுறம் ஊடகங்களை அடக்கி அரசாங்கத்திற்கு எதிராக உருவாகும் சக்திகளை ஒடுக்குவதற்கு தயாராகி வருவதாகத் தெரிவிக்கும் தொழிற்சங்கத் தலைவர், தொழிற்சங்க இயக்கம் உள்ளிட்ட பரந்த ஜனநாயக சக்திகள் இதற்கு எவ்வகையிலும் இடமளிக்கப் போவதில்லை என வலியுறுத்தியுள்ளார்.

## யாழ். முதல்வர் ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜப்பானியத் தூதரகத்தினால் அன்பளிப்புச் செய்யப்படவிருந்த திண்மக் கழிவகற்றலுக்கான நவீன வாகனங்களைப் பெற்றுக் கொள்வதில் தாமதம் ஏற்பட்டதன் காரணமாக அவ்வாகனங்களின் தீர்வை மற்றும் இதர செலவுகளுக்காக ஜப்பானியத் தூதரகத்தினால் யாழ். மாநகர சபைக்கு வழங்கப்பட்ட ரூபா 14 மில்லியனைத் திரும்பச் செலுத்துவது தொடர்பில், மாநகர சபைக்குத் தெரியப்படுத்தாமல் பணத்தைத் திரும்பச் செலுத்த முடிவு செய்துள்ளோம் என சபை சார்பில் ஆணையாளர் அனுப்பிய கடிதம் தொடர்பான சர்ச்சையை அடுத்து, உறுப்பினர்களுக்குத் தெரியப்படுத்தாமல் மூடுமந்திரமாக சபை நடத்தப்படுவதைக் கண்டித்தே உறுப்பினர்கள் வெளிநடப்பு செய்துள்ளனர்.

யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு தெரியாது முதல்வரும் ஆணையாளரும் ஒரு தலைபட்டசமாக ஒரு கோடியே 43 லட்சத்து 26 ஆயிரத்து 466 ரூபா தொடர்பில் முடிவெடுத்தமையை கண்டித்த உறுப்பினர்கள் இது தொடர்பில் சபையில் வருத்தம் தெரிவிக்க வேண்டும் எனப் பலமுறை கோரியும் முதல்வர் அதனை ஏறகாது ஏனைய விளக்கம் அளிக்கவே முற்பட்டார். இதனை ஏறக மறுத்தே உறுப்பினர்கள் சபையில் இருந்து வெளி நடப்புச் செய்தனர்.

இதன்போது பதிலளித்து வந்த முதல்வர், தாம் தூத்தரகத்துக்கு அனுப்பிய இந்தப் பதில் கடிதத்தை ஜப்பானியத் தூதரகமே தட்டச்சு செய்து, ஒப்பமிட்டு அனுப்புமாறு மெயிலில் அனுப்பியத், நாம் ஒப்பமிட்டு அனுப்பினோம் எனப் பதிலளித்த போது 'இது ஜப்பானிய மாநகர சபையா? அல்லது யாழ்ப்பாணம் மாநகர சபையா?' என உறுப்பினர்களால். கேள்வி எழுப்பப்பட்டது.

இதனபோது முதல்வர் மற்றும் பிரதி முதல்வருக்கும் இடையில் கடும் வாய்த் தர்க்கமும் ஏறபட்டது. இதன்போது முதல்வர் தான் நாட்டில் இல்லாத காலத்தில் தன்னை தகுதியற்றவர் என்ற தொனியில் பதில் முதல்வர் கடிதம் எழுதியுள்ளார் எனக்குறிப்பிட்டபோது,, உங்களது இரண்டு வருட காலத்தில் இவ்வீடாயத்தில் ஓர் அமைச்சரவை அங்கீகாரம் பெற்றுத் தாருங்கள் என அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிற்கு கடிதம் எழுதியதைத் தவிர வேறு ஏதும் பயனுள்ள நடவடிக்கை எடுத்தமைக்கு ஆதாரம் இருந்தால் காண்பியுங்கள் என பிரதி முதல்வர் சவால் விடுத்தார்.










# மறைந்த அமைச்சர் தேவநாயகம் உருவச்சிலை கிழக்கு பல்கலை வளாகத்துக்குள் நிறுவப்பட்டது!





மட்டக்களப்பு, செப். 28

மட்டக்களப்பு மாவட்டத்தின் ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினரும், அமைச்சருமான கே.டபுள்யூ தேவநாயகம் மட்டக்களப்பு மாவட்டத்துக்கு அளப்பரிய பல சேவைகளை செய்துள்ளார். அவரின் வெற்று இடத்தை பூர்த்தி செய்யும் அளவிற்கு எந்தவொரு அரசியல் பிரதிநிதியும் இன்றுவரை இல்லை என்றே கூறமுடியும் என செங்கலடி பிரதேச சபை உறுப்பினர் வ.சுரேந்திரன் தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தினதும் மட்டக்களப்பு மண்ணினதும் பெருமைமிகு அடையாளங்களில் ஒன்றான கிழக்கு பல்கலைக்கழகத்தை நிறுவியவரும், முன்னாள் அமைச்சர் அமரர் க.வி.தேவநாயகத்தின் திருவுருவச்சிலை கிழக்குப் பல்கலைக்கழக வளாகத்தில் நிறுவப்பட்டு திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நான் ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி உறுப்பினர் ஆவேன். ஆனால், ஐக்கிய தேசிய கட்சி நாடாளுமன்ற உறுப்பினருக்கு சிலை வைப்பது தவறு என்று அரசியலாகர் பார்ப்பார்கள் என்றால் அதுவே அவர்களின் அறிவற்ற தன்மை! நமது அரசியல் செயற்பாடுகள் எப்போதும் மக்கள் சார்ந்ததே ஆகும். நான் கட்சியை நம்பி அரசியல் செய்பவனல்லன். நாம் காட்டும் காட்சிகளையும் மக்களையும் நம்பித்தான் வந்தேன்.

அவர் நிலம் நிர்வாகம் சார்ந்த அபிவித்தியை முன்னிறுத்தி தனது அரசியல் சேவையைத் தொடர்ந்தார். எமது மாவட்ட இளைஞர்களின் கல்வி வாழ்வின் ஒளிமயமாக வேண்டும் என்று 1980 காலங்களிலே இந்த கிழக்கு பல்கலை கழகம் ஒன்றை கொண்டு வந்து மட்டக்களப்பு மாவட்டத்தையே திரும்பி பார்க்கும் வண்ணமாக பல கல்விமான்களை உருவாக்கியவர் என்பது பெருமைக்குரிய விடயமாகும்.

ஓர் அரசியல்வாதி தனது சமூகத்துக்கு செய்த சேவை என்ன என்பதற்கு இந்த பல்கலைக்கழகமே சான்று. இன்று அவர் மறைந்து இருபது வருடங்கள் சென்றாலும் அவருடைய சேவை இன்றும் தொடர்கின்றது ஒவ்வொரு பட்டதாரியாகவே.

சேவை செய்வதற்காக அரசியல் செய்தவர். கொழும்பு ரோயல் கல்லூரி மாணவர், கல்லூரி கிரிக்கட் அணியிலும், ஆளும் கட்சியில் அமைச்சர் பதவியில் இருந்த போதிலும் வடமுனைப்பகுதியில் சிங்களக் குடியேற்றத்தை நேரடியாக சென்று தடுத்து நிறுத்தியவர். யாரையும் பழிவாங்கும் எண்ணம் இல்லாத மகான்.

1977 தேர்தலில் அவரை ஆதரிக்காத தகுதி கொண்ட அனைவருக்கும் அரச தொழில் பெற்றுக்கொடுத்தவர். செங்கலடி பொதுச்சந்தை, தபாலகம், பிரதேச செயலகம், வாழைச்சேனை மீன்பிடி துறைமுகம், கிரான் அரச அச்சகம், முறக்கொட்டான்சேனை அரச அரிசி ஆலை போன்ற வற்றை அமைத்து பல வேலை வாய்ப்புகளை வழங்கியவர்.

இப்போது அரசியல் செய்பவர்கள் இவரது கால்த்தூசிக்கும் லாயக்கு இல்லாதவர்கள். எமது மட்டக்களப்பு ஆளுமை. முடிந்தால் அவர் மாதிரியா வது அரசியல் செய்யுங்கள். – என்றார்.

பிரதேச சபை உறுப்பினர் வ.சுரேந்திரனின் வேண்டுகோளுக்கிணங்க வர்த்தகர் எஸ்.கிரியின் நிதிப்பங்களிப்பில் கிழக்குப்பல்கலைக்கழக வளாகத்தில் முன்னாள் அமைச்சர் அமரர் க.வி.தேவநாயகம் சிலை நிறுவப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30. கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## அரசியல் ஆச்சரியம்

**மக்களின் அளப்பரிய ஆதரவோடும் செல்வாக்கோடும் அதிகாரத்துக்கு வந்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தனது நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவியில் நீடித்து, நிலைத்து, நிற்க முடியாமல் மிகக் குறுகிய காலத்தில் நாட்டை விட்டு ஓடித் தப்ப வேண்டிய நெருக்கடிக்கு உள்ளானார்.**

**நாட்டு மக்களின் மனநிலையைப் புரிந்து கொள்ளாமல் எதேச்சாதிகாரமாக நடந்தமையின் விளைவுதான் அது.**

**சூழவிருந்தவர்களின் தவறான வழிநடத்தல்களுக்கு இடம் அளித்த ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ அதன் பலனை அனுபவிக்க வேண்டியவரானார்.**

**அவர் திடீரென நாட்டை விட்டு ஓடித் தப்பியமையால் அதுவரை செல்வாக்கு இழந்து, அரசியல் அந்தகாரத்தில் தூக்கி வீசப்பட்டு, மூலையில் ஒதுக்கப்பட்டிருந்த ரணில் விக்கிரமசிங்கவுக்கு அதிர்ஷ்டம் அடித்தது. நிறைவேற்று அதிகார ஜனாதிபதி பதவி தேடி வந்து மடியில் வீழ்ந்தது.**

**அதை வைத்து அவர் அரசியலில் தாமும் தேறி நாட்டையும் தேறவைப்பார் என்று எதிர்பார்த்தால், அவரோ அந்த வாய்ப்பைத் தாமே போட்டுடைப்பார் போன்று செயற்படுகின்றார்.**

**கோட்டாபய ராஜபக்ஷவையும் விட வேகமாக பொது மக்கள் வெறுப்பை ரணில் சம்பாதித்துக் கொள்ள வேண்டிய நேருமோ என்றுதான் படுகின்றது.**

**கோட்டாபய போன்று இவரும் மக்களின் மனநிலையைப் புரிந்து கொள்ளாமல், அருகில் உள்ள அரசியல்வாதிகளின் இசைக்கு நடனமாடி, வாய்ப்பைக் கோட்டைவிடப் போகின்றார் என்ற பாணிதான் புலப்படுகின்றது.**

**சட்டத்தையும் ஒழுங்கையும் நேர்சீர்படுத்துவது என்ற கற்பனையில் அவர் முன்னெடுக்கும் எதேச்சாதிகாரப் போக்கு நடவடிக்கைகள், கோட்டாபயவுக்கு நேர்ந்தமை போல பூமராங் ஆக இவரை நோக்கியே திரும்பும் வாய்ப்புகள் தென்படுகின்றன.**

**கோட்டாபயவை எதேச்சாதிகாரப்போக்கில் செயற்படத் தூண்டி, அவரை சர்வாதிகாரியாக உலகுக்கு தோன்ற வைத்த கமல் குணரட்ன, தேசபந்து தென்னக்கோன் போன்றோர் ரணில் விக்ரமசிங்கவையும் அதே வழியில் நெறிப்படுத்துகின்றனர் என்று விடயம் அறிந்த அரசியல்வாதிகளும் தொழிற்சங்கத் தலைவர்களும் சுட்டிக்காட்டுகின்றனர்.**

**அரசை மாற்றுவதற்காகப் போராடியோருக்கு எதிராகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தை ஏவி விட்டமை வரையான எதேச்சாதிகாரப்போக்குகள், பொருத்தமற்ற சட்டத்தின் கீழ் முட்டாள்தனமாக அதியுயர் பாதுகாப்பு வலயங்களை அறிவித்தமை, பொலிஸாரின் முன் அனுமதி இல்லாமல் ஆர்ப்பாட்டங்கள் நடத்துவது குற்றம் என்று பிழையான சட்ட வியாக்கியானங்களை அறிவிப்பது என பல குளறுபடிகள் ரணில் விக்கிரமசிங்கவின் இப்போதைய ஆட்சியில் கட்டவிழ்கின்றன. இதனால் இந்த ஆட்சியின் சீத்துவம் சந்தி சிரிக்கும் விவகாரமாயிருக்கிறது.**

**கோட்டாபயவாவது அரசியலுக்குப் புதியவர். குழந்தைப்பிள்ளை. கிடைத்த வாய்ப்பை தமது அரசியல் கற்றுக்குட்டித்தனத்தால் அவர் போட்டுடைத்தார் என்றால், அரசியலில் பழமும் தின்று கொட்டையும் போட்ட கிழட்டு நரி ரணில் விக்கிரமசிங்கவும் தந்திரோபாயங்கள் மறந்து, அற்பத்தனமாக நடந்து, பதவியைப் பறிகொடுக்கும் சூழலைத் தானே வலிந்து வரவேற்கும் விசித்திரமான விதத்தில் செயற்படுவது ஆச்சரியமாகத்தான் இருக்கின்றது.**

# எனது ஆட்சிக் காலத்தில் மக்கள் சாப்பிட்டு மகிழ்வுடன் வாழ்ந்தனர்!

### மைத்திரிபால பெருமிதம்



நாட்டில் தற்போது நிலவும் பிரச்சினைகள் எவையும் தமது ஆட்சிக்காலத்தில் இருக்கவில்லை என முன்னாள் ஜனாதிபதியும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் தலைவருமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடைபெற்ற வைபவம் ஒன்றின் பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

எனது ஆட்சிக்காலத்தில் பொருள்களின் விலைகளும் குறைவாக இருந்தன. சம்பளமும் அதிகம். மக்கள் கடவுளின் புண்ணியத்தில் சாப்பிட்டு, குடித்து மகிழ்ச்சியுடன் வாழ்ந்தனர். நாட்டில் இந்தச் சந்தர்ப்பத்தில் சர்வக்கட்சி அரசாங்கம் அமையாது.

இதனால், நான் மிகவும் முற்போக்கான கட்சிகளை இணைத்து கூட்டணி ஒன்றை அமைத்து மக்களுக்கு சார்பான அரசாங்கத்தை உருவாக்க எதிர்பார்த்துள்ளேன். கொழும்பு மற்றும் அதனை சூழவுள்ள பகுதிகளில் அதி உயர் பாதுகாப்பு வலயங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளமை சிறந்த நிலைமை யல்ல.

இதன் ஊடாக அரசாங்கத்துக்கு எதிராக மக்களின் எழுச்சி அதிகரிப்பது மாத்திரமே நடக்கும் எனவும் முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மேலும் தெரிவித்துள்ளார்.

# காந்தி தேசம் புறந்தள்ளிய ஈழத்து அஹிம்சைப் போர்!

### வண.பிதா கந்தையா ஜெகதாஸ் ஆதங்கம்




உலகத்திற்கு உண்ணாவிரதத்தை சொல்லிக்கொடுத்தவர் காந்தியாகயிருக்கலாம். ஆனால் அந்த காந்தி தேசத்துக்கே உண்ணாவிரத்தின் மகிமையை ஒப்புயர்வற்ற தன்மையை உணர்த்தியவர் தியாக தீபம் திலீபன் என பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் வணபிதா கந்தையா ஜெகதாஸ் தெரிவித்துள்ளார்.

மட்டக்களப்பில் தியாகதீபம் திலீபனின் 35 ஆவது ஆண்டு நினைவு தினம் கடந்த திங்கட்கிழமை உணர்வுபூர்வமாக அனுஷ்டிக்கப்பட்ட போது அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்துத் தெரிவிக்கையில் –

'தமிழின வரலாற்றில் தியாகதீபம் திலீபன் ஒப்பற்ற தியாகமாக உலக அஹிம்சை அறப்போராட்டத்தினுடைய ஓர் உன்னத வடிவமாகத் திகழ்கின்றார்.

உலக வரலாற்றில் நீராகாரம் இல்லாமல் உண்ணா விரதத்திலிருந்து தன்னுடைய இன்னுயிரை ஈகம் செய்தவராகவும், முதன்மையானவராகவும் தியாக தீபம் திகழ்கின்றார்.

கடந்த 1987 ஆம் ஆண்டு இந்திய, இலங்கை ஒப்பந்தம் செய்யப்பட்டு தமிழர்களின் வாழ்வில் மிகப்பெரும் துன்பியல் நிகழ்வு கட்டவிழ்த்துவிடப்பட்டது.

இதன்போது இந்திய அமைதி காக்கும் படையினர் இலங்கை மண்ணில் கால் பதித்து தமிழர் விரோத செயற்பாடுகளில் ஈடுபட்டிருந்த சூழ்நிலையில் ஐந்து கோரிக்கையை முன்வைத்து சாகும் வரையான போராட்டத்தை ஆரம்பித்தார்.

இந்தப் போராட்டம் ஆரம்பிப்பதற்காக முக்கிய காரணம் அன்றைய பிராந்திய வல்லரசான இந்திய தேசமும், இலங்கை இன ஒடுக்குமுறை அரசாங்கமும், கூட்டுச்சேர்ந்து தமிழினத்துக்கு எதிராக மிகப்பெரும் சதி வலையைப் பின்னியதுடன் தமிழினம் அழிப்புக்குத் தயாரானது.

இதனை செய்ய வேண்டாம் என்று கோரி மென்முறையிலும் அஹிம்சை ரீதியிலும் வேண்டுகோள் விடுத்து இந்த மிகப்பெரும் அஹிம்சைப் போரை ஆரம்பித்தார் திலீபன்.

இந்த அஹிம்சை போரை ஆரம்பித்த போது உலகுக்கு நம்பிக்கையிருந்தது. உலகுக்கு முதன்முதலில் அஹிம்சையை, உண்ணாவிரதத்தை அறிமுகப்படுத்தியவர் மகாத்மா காந்தியடிகள்.

காந்திதேசம் இந்த அஹிம்சைக்கு, உண்ணாவிரதத்திற்கு மதிப்பளிக்கும் என்ற மிகப்பெரும் எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் காந்திதேசம் அதனைப் புறந்தள்ளி அஹிம்சையைக் கொச்சைப்படுத்த 12 ஆவது நாள் தியாகதீபம் தனது இன்னுயிரை தியாகம் செய்தார்.

தியாக தீபம் திலீபனின் அஹிம்சைப் போராட்டத்துக்கு அன்றைய காலகட்டத்தில் உலகம், இந்திய தேசம்,இலங்கை தேசம் செவிசாய்த்திருந்தால் அந்த நாளில் வரலாறுகள் வேறுவிதமாக மாறியிருக்கும். அழிவுகளும் துன்பங்களும் தடுக்கப்பட்டிருக்கும்.

ஆனால் அதனை காந்தி தேசமும் இலங்கையும் புறந்தள்ளி தமிழர் விரோத செயற்பாடுகளை முன்னெடுத்த காரணத்தாலேயே தமிழர்களின் விடுதலைப் போராட்டம் ஆயுதப் போராட்டமாகவும் நீடிக்க வழியேற்படுத்தியது. – எனத் தெரிவித்துள்ளார்.

கந்தையா ஜெகதாஸ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை மக்கள் பேரெழுச்சி இயக்கத்தின் ஒருங்கிணைப்பாளர் எஸ்.சிவயோகநாதன் மற்றும் அருட்தந்தை ஜோசப்மேரி மற்றும் சிவில் சமூக செயற்பாட்டாளர்களும் கலந்துகொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# காட்டு யானை தாக்கியதில் இருவர் அநுராதபுரத்தில் பலி!

அநுராதபுரம், செப். 28

காட்டு யானை தாக்கியதில் இருவர் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்த சம்பவம் அநுராதபுரம் மாவட்டம், எப்பாவல பிரதேசத்தில் நேற்று (செவ்வாய்க்கிழமை) இடம்பெற்றுள்ளது என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

எப்பாவல பிரதேசத்தின் கெலேகம மற்றும் ரொட்டவெள ஆகிய பகுதிகளை சேர்ந்த இருவரே காட்டு யானையின் தாக்குதலுக்கு இலக்காகி உயிரிழந்துள்ளனர். மேலும், 58 மற்றும் 64 வயதான இருவரே இந்த சம்பவத்தில் பலியாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.



கிளிநொச்சியில்

# ஐஸ்வர்யம்

## பெருவிருந்து மண்டபம்

## Ishwaryam Banquet Hall



Tel:- 021 228 3701, 071 7354308

Whatsapp:- 071 7736 4308

No.315, Kandy Road,
Kilinochchi




சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்

# ISHWARYAM BANQUET HALL

## BANQUET MEALS HALL





**FULL OPTION**

**MAIN DIHES**

Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style

**DESSERT**

| | |
|---|---|
| ice Cream Cup | - 60/= |
| Fruit Salad | - 60/= |
| I ce Cream & Fruit Salad | - 100/= |
| Cream Caramel | - 120/= |

**SPECIAL MENU PACKAGE**

**BEVERAGES**

| | |
|---|---|
| jUICE 200 ml | - 70/= |
| Milk Drink | - 70/= |
| Cocacola M | - 70/= |
| Pepsi M | - 70/= |
| Swchpees Tin | - 250/= |
| Coca Cola Tin | - 250/= |

காலைக்கதிர்
Kalaikkathir

# இந்தியாவில் பெருகும் அந்நிய நேரடி முதலீடு; இந்த நிதியாண்டில் பத்தாயிரம் கோடி டொலர்



நடப்பு நிதியாண்டில் பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் எளிதாக வணிகம் செய்வதற்கான வசதி காரணமாக 100 பில்லியன் (பத்தாயிரம் கோடி) டொலர் அந்நிய நேரடி முதலீட்டை (எவ்.டி.ஐ.) ஈர்க்கும் பாதையில் இந்தியா உள்ளது என்று இந்திய அரசாங்கம் கடந்த சனிக்கிழமை தெரிவித்துள்ளது.

2021-22இல் நாடு 83.6 பில்லியன் அமெரிக்க டொலர்களை 'எப்போதும் இல்லாத அதிகபட்ச' வெளிநாட்டு வரவுகளைப் பெற்றது.

இந்த அந்நிய நேரடி முதலீடுகள் 101 நாடுகளில் இருந்து வந்துள்ளன. மேலும் நாட்டில் 31 யூனியன் பிரதேசங்கள் மற்றும் மாநிலங்கள் மற்றும் 57 துறைகளில் முதலீடுகள் செய்யப்பட்டுள்ளன. சமீபத்திய ஆண்டுகளில் பொருளாதார சீர்திருத்தங்கள் மற்றும் எளிதாக வணிகம் செய்வதால், இந்தியா நடப்பு நிதியாண்டில் 100 பில்லியன் அமெரிக்க டொலர்களை அந்நிய நேரடி முதலீடுகளாக ஈர்க்கும் பாதையில் உள்ளது. - என்று வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் ஓர் அறிக்கையில் தெரிவித்துள்ளது.

வெளிநாட்டு முதலீடுகளை ஈர்ப்பதற்காக, அரசாங்கம் தாராளமயமான மற்றும் வெளிப்படையான கொள்கையை வகுத்துள்ளது, இதில் பெரும்பாலான துறைகள் தன்னியக்க வழியின் கீழ் அந்நி நேரடி முதலீட்டுக்குத் திறக்கப்பட்டுள்ளன.

தேவையற்ற இணக்கச் சுமையைக் குறைத்தல், செலவைக் குறைத்தல், இந்தியாவில் வணிகம் செய்வதை எளிதாக்கும் வழிகாட்டுதல்கள் மற்றும் ஒழுங்குமுறைகளை தாராள மயமாக்குதல் ஆகியவை சீர்திருத்த நடவடிக்கைகளில் அடங்கும் என அந்த அறிக்கை மேலும் தெரிவித்தது.

நடப்பு நிதியாண்டின் ஏப்ரல் முதல் ஜூன் வரையிலான காலகட்டத்தில் இந்தியாவில் அந்நிய நேரடி முதலீட்டு பங்குகள் 6 சதவீதம் குறைந்து 16.6 பில்லியன் டொலர்களாக உள்ளது.

தரம் குறைந்த மற்றும் அபாயகரமான பொம்மைகளின் இறக்குமதியை நிவர்த்தி செய்வதற்கும், உள்நாட்டு பொம்மைகளின் உற்பத்தியை மேம்படுத்துவதற்கும், அரசாங்கத்தால் பல மூலோபாய தலையீடுகள் எடுக்கப்பட்டுள்ளதாகவும் அது கூறியது.

2021-22 ஆம் ஆண்டில் பொம்மைகளின் இறக்குமதி 70 சதவீதம் குறைந்து 110 மில்லியன் அமெரிக்க டிலர்களாக (ரூ 877.8 கோடி) குறைந்துள்ளது. மறுபுறம், ஏற்றுமதி 61 சதவீதம் அதிகரித்து 326 மில்லியன் அமெரிக்க டொலர்களாக உள்ளது.

(மூலம்: 'பிஸ்னஸ் ஸ்ராண்டட்')




# இந்தியா போன்றே பாகிஸ்தானும் தனது நட்பு நாடு என்கிறது அமெ.!

## ஜெய்சங்கரின் ஆட்சேபத்துக்கு வொஷிங்டன் இப்படிப் பதில்





வொஷிங்டன்,செப்.27

இந்தியாவும் பாகிஸ்தானும் இரண்டு வெவ்வேறு புள்ளிகளில் முக்கியத்துவம் வாய்ந்த தங்களின் நட்பு நாடுகள் என்று அமெரிக்க அரசு தெரிவித்துள்ளது.

அமெரிக்க அதிபர் ஜோ பைடன், எவ்.16 போர் விமானங்களை பாகிஸ்தானுக்கு வழங்க ஒப்புதல் அளித்துள்ளதுள்ளார்.

பாகிஸ்தானிற்கு இராணுவ உதவிகள் வழங்குவதை முந்தைய அதிபர் டிரம்ப் நிறுத்தி வைத்திருந்த நிலையில், தற்போது ஜோ பைடன், போர் விமானம் வழங்க ஒப்புதல் வழங்கியமைக்கு இந்தியா கண்டனம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக அமெரிக்கவாழ் இந்தியர்களிடையே கலந்துரையாடிய இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர் ஜெய்சங்கர் -

"பாகிஸ்தானுக்கு அமெரிக்கா வழங்க இருக்கும் இராணுவ உதவிக்கு கூறும் காரணத்தை ஏற்றுக்கொள்ள முடியாது. எவ்.16 விமானம் யாருக்கு எதிராக பயன்படுத்தப்படும் என்று அனைவருக்கும் தெரியும்.

"பயங்கரவாதத்திற்கு எதிராக போராடுவதற்காகவே பாகிஸ்தானுக்கு போர் விமானம் வழங்க ஒப்புதல் அளித்ததாக அமெரிக்க அரசு கூறுவதை ஏற்க முடியாது. இந்த மாதிரி காரணங்களைக்கூறி அனைவரையும் முட்டாளாக்க வேண்டாம்" - எனத் தெரிவித்திருந்தார்.

இதுகுறித்து செய்தியாளர்கள் கூட்டம் ஒன்றில் பேசிய அமெரிக்க அரசின் செய்தித் தொடர்பாளர் நெட் ப்ரைஸ் கூறியதாவது:-

"இந்தியா, பாகிஸ்தான் ஆகிய இரண்டு நாடுகளுடனான எங்களது உறவுகளை நாங்கள் இணைத்துப் பார்க்க விரும்பவில்லை.

"இந்தியாவும், பாகிஸ்தானும் இரண்டு வெவ்வேறு முக்கியமான புள்ளிகளில் எங்களுடைய நட்பு நாடுகளாகும். இரு நாடுகளுடனும் நட்பின் அடிப்படையில் வளங்களையும், தகவல்களையும் பரிமாறிக்கொள்கிறோம். இந்தியாவுடனான எங்களின் உறவு தனித்துவமானது. பாகிஸ்தானுடனான எங்களின் உறவும் தனித்துவமானது." - இவ்வாறு அவர் கூறினார்.

# பாய் பிரண்டுகள் வாடகைக்கு....! பெங்களூரில் கலக்கும் டாய்பாய் செயலி...!

பெங்களூரில் பாய் பிரண்டுகளை வாடகைக்கு எடுக்கும் டாய்பாய் எனப்படும் போர்ட்டல் திறக்கப்பட்டுள்ளது.

நாம் தனிமையாக உணர்ந்தால் அல்லது ஏதாவது ஒரு பிரச்சினையை எதிர்கொண்டிருந்தால் நாம் முதலில் தேடுவதும் நண்பர்களைதான். அவர்களுடன் வெளியே சென்று ஊர் சுற்றிவிட்டு வந்தால் நாம் சற்று லேசாக உணர்வோம்.

யார் என்று தெரியாத ஒரு நண்பரை வாடகைக்கு எடுத்து ஊர் சுற்றுவீர்களா? அப்படி செய்தால் உங்கள் மனஅழுத்தம் குறையுமா? இது ஒரு விசித்திரமான கேள்விதான்.

ஆம். நாம் வாழ்ந்து கொண்டிருப்பது தொழில்நுட்பயுகத்தில் என்பதை மறந்து விடாதீர்கள். பாய் பிரண்டுகளை பெண்கள் வாடகைக்கு எடுத்துக்கொள்ள முடியும் என்றால் நம்புவீர்களா? அந்த வகையில், பெங்களூரில் பாய் பிரண்டுகளை வாடகைக்கு எடுக்கும் டாய்பாய் எனப்படும் போர்ட்டல் திறக்கப்பட்டுள்ளது.

காதலனால் ஏமாற்றப்பட்டு தனிமையில் மன அழுத்தத்தில் இருக்கும் பெண்கள் பேசுவதற்கு ஆண் நண்பர்கள் தேவை என்றால் இந்த போர்ட்டல் மூலம் புக் செய்து கொள்ளலாம். இன்ஸ்டாகிராம் மூலம் தொடர்பு கொண்டு டாய் பாய் போர்ட்டலுக்கான ஏபிகே பைலை பெற்றுக்கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த பயன்பாடு Google Play store இல் கிடைக்கவில்லை. இது தற்போது பெங்களூரில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.



காலைக்கதிர்
Kalaikkathir

# நல்லூர் பதியின் பரிபாலிப்பின் ஆளுமை குகஸ்ரீ குமாரதாஸ் மாப்பாண முதலியார்

## அவரின் ஓராண்டு நினைவு தினம் இன்றாகும்





- முனைவர் திருநாவுக்கரசு கமலநாதன் -

யாழ்ப்பாணத்தின் மாண்புமிகு ஆளுமை ஒன்று எமை விட்டேகி முருகன் பாதார விந்தங்களைத் தழுவி ஆண்டொன்று ஆகிவிட்டது.

அவர் நல்லூர் மண்ணிலே குடை பிடித்து நடந்து வரும் காட்சியும், அந்தத் தூணிலே சாய்ந்திருந்து நிர்வாகம் செய்த பாங்கும், தேர்த் திருவிழாவின் போது தேர்த் தரிப்பிட மேல்முன்றிலில் அமர்ந்திருந்து, தேர் முறைப்படி இருப்பிடத்தை வந்துசேர வழங்கும் ஆசீர்வாதமும் இன்னும் பலவும் பசுமையாக எம் போன்றவர் மனத்திரையில் மறையாது, குறையாது நிழலாடி நிற்க ஆண்டொன்று கடந்துவிட்டது.

பக்தியுலகில் என்றென்றும் மறந்திட, முடியாத ஆளுமை மிக்கிருந்தவர் குகஸ்ரீ குமாரதாஸ் மாப்பாண முதலியார் அவர்கள்.

ஆரவாரம் காட்டாத நிர்வாகம், எவரையும் நோக வைக்காத சொல்லாடல், எவற்றையும் துல்லியமாக உய்த்துணர்ந்து கருமம் புரியும் செயலாற்றல், தவறுகள் காணப்படின் தனது மௌனப் பார்வையால் திருத்திக் கொள்ள வாய்ப்புத் தரும் அருளாற்றல், முருகன் விருப்பப்படியே யாவும் நடைபெறுகின்றன என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கையும் பரப்புரைகளும் ஐயா ஆற்றுப்படுத்திய நெறிமுறைகள்.

இலட்சோப இலட்சம் மக்கள் கூடும் நல்லூர் கந்தசாமி கோவில் நிர்வாகம் என்பது லேசுப்பட்ட காரியமல்ல. மேற்படி கோவிலின் நிர்வாகம் அதன் ஆரம்பம் முதல் மாப்பாணர் குடும்பத்தினரே ஆற்றி வருகின்றார்கள்.

முதலாம் மாப்பாணர் தொன்யுவான் இரகுநாத மாப்பாண முதலியாரால் 1734 ஆம் ஆண்டளவில் மேற்படி ஆலயம் தற்போதைய இடத்தில் அமையப் பெற்றது. இன்று கோயிலை நிர்வகிக்கும் குகஸ்ரீ சயந்தன் குமாரதாச மாப்பாண முதலியார் அவர்கள் அந்த வரிசையில் பதினோராவது மாப்பாணராவார்.

இவரது தந்தையரே யாழ்ப்பாணத்து சைவத் தமிழ் மக்களின் ஆளுமையின் மதிப்பார்ந்த அடையாளமாகப் போற்றப்டும் குகஸ்ரீ குமாரதாஸ் மாப்பாண முதலியார் அவர்களாவார். அவர் அவரது சகோதரர் ஒன்பதாம் மாப்பாணர் ண்முகதாஸ் மாப்பாண முதலியாரோடு இணைந்து நிவாகக் கடமைகள ஆற்றியவர். ஏறத்தாழ அறுபதுக்கு மேற்பட்ட வருட நிர்வாக அனுபவம் நல்லூர் கோயிலை வியத்தகு முறையில் அவர் நிர்வாகம் செய்ய உதவியுள்ளது.

அத்துடன் தனக்குப் பின்னர் கோயிலை நிர்வகிக்கவும் பரிபாலிக்கவும் தகுதியான மாண்பினர் ஒருவரையும் தகுந்த பயிற்சி வழங்கி விட்டுச் சென்றுள்ளார்.அவரது வழிகாட்டலில் இவ்வாண்டுப் பெருவிழாவும் குமாரகலச கோபுரக் கும்பாபிஷேக கிரியைகளும் நடைபெற்ற பாங்கும் முறைமையும் ஐயாவின் நிர்வாக ஆற்றலையும் தீர்கதரிசன செயலினையும் பிரதிபலிப்பனவாக உள்ளமை நிதர்சனமானது.

உயர் சிறப்புக்கொண்ட நிர்வாகி யாரெனக் கேட்பின் எவரொருவர் தான் சார்ந்த நிறுவனத்தில் தனது கால நிர்வாகக் கடமைகளைக் குறைவின்றி ஆற்றுவதுடன் அந்த நிறுவனத்தின் நீண்ட எதிர்காலத்தை மனத்திருத்தி தகுதியானவரை பயிற்றுவித்து விட்டுச் செல்கிறாரோ அவரே என்று விடை காண்பர் அறிஞர்.

அந்தப் பணியை ஐயா வெகு நேர்த்தியாக ஆற்றியுள்ளமை கண்டு சைவத்தமிழ் உலகம் மனமகிழ்ந்து ஐயாவை நினைந்து உருகுகின்றது.

நல்லூரில் அவர் வளர்த்துவிட்ட நெறிமுறைகள் கண்டு, மருண்டு பெரிதும் மன அருட்டலுக்குள்ளான, சமீபத்தில் நல்லூர் கந்தசாமி கோவிலைப் தரிசித்த இந்தியாவின் தமிழகப் பிரமுகர் அங்குள்ள கோவில்களின் தருமகர்தாக்களை நல்லூரைப் பார்த்து கோயில்களைப் பரிபாலிக்கப் பழகுங்கள் என்று உரைத்தமை வெறும் வெற்று வார்த்தைகள் அல்ல. ஐயாவின் நிருவாகச் செல்நெறிக்குக் கிடைத்த பெருமையான வாழ்த்துக்கள் என்பர்.

அளவுடன் பேசி, அளவற்ற திருப்பணிக் கருமங்களை ஆற்றி வெற்றி கண்டவர் ஐயா அவர்கள்.

அவரது காலத்தில் நல்லூர் கந்த சுவாமியாருக்கு ஆற்றப்பட்ட திருப்பணிகளைப் பட்டியலிடின் அவை மிக நீண்டவை. அவற்றில் முக்கியமானவை தீர்த்தக்கேணிக்கும் கோயில் பிரகாரத்துக்கும் இடையேயிருந்த பாதையை மூடி, கோயிலை விஸ்த்தரித்தார். பொதுவாக அவர் கோயில் பிரகாரம் பரந்து விரிந்து வெளியாக இருப்பதை விரும்புவார். அது அடியார்கள் வழிபாடு புரிய வசதியாக இருக்கும் என்பதுடன் அந்த வெளி பஞ்ச பூதங்களின் செல்வாக்கை வழிபாட்டில் கலக்க வைக்கும் என்பதும் அவரின் எண்ணம் போலும். அதனால் கோயில் அருகில் இருந்த பல கட்டடங்களை அகற்றி கோயிலைப் பெரிதாக்கினார். மேலும் சண்முகப்பெருமானுக்கு அழகிய சிறிய கோபுரம் அமைத்தார். முத்துக்குமாரருக்கு விமானத்துடன் கூடிய சந்நிதி. கிழக்கு கோபுரத்துடன் அமைந்துள்ள சொக்கட்டான் பந்தல் வடிவில் அமைந்த வில்லு மண்டபம், வசந்த மண்டப விஸ்தரிப்பு, சண்முக நவதள ராஜ கோபுரம், குபேர நவதள ராஜ கோபுரம், தீர்த்தக் கேணி புனருத்தாரணம், சண்முகப் பெருமானுக்கு பொன்னாலான சொர்ணசபை விமானம் எனப் பலவற்றை இங்கு குறிப்பிடலாம்.

இவை யாவும் அவர் கந்தசுவாமியார் மீது கொண்ட பக்தியின் வெளிப்பாடுகள். இவ்வளவற்றையும் அலுங்காமல் நலுங்காமல் ஆற்றிவிட்டு தனக்கு ஒன்றுமே தெரியாது, எல்லாம் முருகனே என்று அமைதியாக இருப்பார். அந்த அமைதியும் அடக்கமுமே அவரை நாளும் பொழுதும் நினைவூட்டி நிற்கின்றன.

அவர் எம்மை விட்டுச் சென்றாலும் முருகனடியில் இருந்து ஆசீர்வதித்த வண்ணமே இருப்பார். அவரை நாம் ஆலயத்தில் முருகனாகவே கண்டோம். இன்றும் அவர் எம்மனதில் வாழ்கின்றார். முருகனடியில் அவர் இன்புற்றிருக்கப் பிரார்த்திக்கின்றோம்.



காலைக்கதிர் Kalaikkathir

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். ‘காலைக்கதிர்’ வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!

## தமிழ் மக்களின் முடக்குவாதம்



- செல்லத்துரை ரவீந்திரன் -

### அங்கம் - 134

மறைந்த அன்றைய உயர்நீதிமன்ற நீதியரசர் மாணிக்கவாசகர் மறைந்த ஜனாதிபதி ஜே.ஆரின் அயல் வீட்டுக்காரர். அடிக்கடி அந்த உறவினால் நட்பிலும் இருந்தவர்.

1977 ஆம் ஆண்டின் ஜே.ஆரின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் நம்பிக்கை கொண்டு, அவர் தேர்தலில் வென்று அரசாங்கத்தை அமைத்தால் தமிழ் மக்களுக்கான தீர்வை தருவதற்கு ஆர்வம் கொண்டிருக்கிறார் எனவும் நம்பி, 1977 ஆம் ஆண்டின் கலவரங்களின் பின்னர் கோபாவேஷமாக ஜே.ஆரினது பேச்சுக்களைப் பற்றி அவருக்கு கருத்துக்கள் கூறினார் எனவும், தொடர்ந்த சம்பாசணைகளில் நடந்தவற்றையும் பம்பலப்பிட்டி, கொழும்பு இந்து கல்லூரி அகதி முகாமில் இருந்து பேசும்பொழுது எங்களுக்கு சொல்லுவார். அகதிகளுக்காக நாங்கள் வைத்த சில உதவிகளுக்கான கோரிக்கைகளை



தியாகி திலீபன்

யும் நேரடியாக ஜே.ஆரிடம் எடுத்துச் சென்று உதவியவர்.

அவர் தெரிவித்தபடி ஜே.ஆர். தமிழ் மக்களுக்குத் தனித்துவமான உரிமைகள், பிரதேசங்கள் இருப்பதை மாணிக்கவாசகருடன் இருந்த நட்பிலும் கூட ஒப்புக் கொள்ளவில்லை. சிங்கள மக்கள் என்றுமே சமஷ்டியை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள், ஆகவே அதனை ஒருபோதும் அவர்களுடைய ஒப்புதலுக்குக் கொண்டு செல்ல மாட்டேன் என்று ஜே.ஆர். கூறுவாராம்.

தமிழ் மக்கள் ஒரு நாட்டுக்குள் ஒரு மக்களாக வாழ்வதுதான் அவர்களுக்கும் நல்லது, நாட்டுக்கும் நல்லது என்பது ஜே.ஆரின் ஒரே கருத்து.

சிலேடையாக “தேர்தலில் கூட அவர்கள் பீற்றும் விடயத்துக்கான (தமிழீழத்துக்கான) ஆமோதிப்பை யாழ்ப்பாண மாவட்டத்திற்குள் மட்டும்தான் அவர்கள் பெற்றார்கள். ஆகவே மாணிக்கவாசகர், நீர் அமிர்தலிங்கத்தை தமிழீழத்தை யாழ்ப்பாணத்துக்கு மாத்திரம் கேட்கச் சொல்லும். நான் சிங்கள மக்களை அதைக் கொடுத்து விட வேண்டிய ஏற்பாடுகள் செய்கிறேன். ஆனால் இருந்து பாரும்.



நீதியரசர் வி.மாணிக்கவாசகர்

அது கொடுக்கப்பட்ட ஆறு மாதங்களுக்குள்ளேயே அமிர்தலிங்கம் என்னிடம் ஓடி வந்து, இதை மீளப் பெற்றுக் கொள்ளுங்கள், எங்களால் நடத்த முடியாது, எங்களுக்குள்ளேயே போட்டி, பொறாமை. அதனால் இது சரிவராது” – என கூறுவார் என்று நையாண்டியாகச் சொல்வது உண்டாம்.

திலீபனது நினைவு விழாவில் நடந்த அவமரியாதைகளையும், அதிகாரங்களுக்காக நடந்த போட்டிகள், சண்டித்தனங்கள் உன்மத்தங்களையும் பார்க்கும் போது நீதியரசர் கூறியவற்றை நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை.

கோட்டாபய ஜனாதிபதியாக நினைவேந்தல் நிகழ்வுகளை இரும்புக் கரம் கொண்டு நீதிமன்ற உத்தரவுகளுடன் அடக்கிய போது, வெகுண்டு எழுந்து, அதற்கு எதிராகப் போராட்டங்கள், தியாகங்கள் செய்யாமல் வீடுகளுக்குள்ளேயே இருந்து சுடர் ஏற்றி, பத்திரிகைகளில் பதிவேற்றியவர்கள், அந்தத் தடைகளுக்கு ஒற்றுமையாக எதிர்ப்பு தெரிவிக்காதவர்கள், இன்று நினைவேந்தலில் குளிர் காய்ந்து, அரசியல் லாபம் தேடுகிறார்கள். நடத்தப்படுகின்ற இப்படியான நினைவேந்தல்களும், பயங்கரவாதத் தடை சட்டத்தை நீக்க வேண்டும் எனக்கோரி அம்பாந்தோட்டை வரையான யாத்திரைகளும் சவாரிகளும் அவற்றுக்கு இணையான போராட்டங்களும், திலீபனது உருவத்தைத் தாங்கிய பாதயாத்திரைகளும், தமிழ் மக்களுக்கு தேவையானவற்றை, அவர்களது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதற்காக நடத்தப்படுபவையாகத் தெரியவில்லை. அப்படியாக சர்வதேச கணக்காளர்கள் கருதவும் இல்லை.

இவை அரசியல்வாதிகள் தங்கள் இருப்புக்காக வரக்கூடிய தேர்தலில் இடங்களை வெல்வதற்கு மக்களின் உணர்ச்சிகளைத் தூண்டி, இடம்பெற துடிக்கும்



அமிர்தலிங்கம்

தூண்டில்களாகவே – cheap politics - என்று கருதுகிறார்கள்.

திலீபன் உண்ணாவிரதம் இருந்ததில் முன்வைத்த கோரிக்கைகளில் இரண்டு அடிப்படைகள் இருந்தன.

ஒன்று – ராஜீவினால் பிரபாகரனுக்கு வாக்களிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகம் காலதாமதம் இன்றி அமைக்கப்பட வேண்டும். அந்த நிர்வாகம் அமைந்தால் அதில் விடுதலைப் புலிகள் பெரும்பான்மையானவர்கள். ஆயினும் நிர்வாகம் சிங்கள அரசிடமிருந்து இந்தியாவின் மேற்பார்வையில் தமிழ் மக்களிடம் வந்து சேரும். தமிழ் மக்கள் அல்லல்பட்டதே அந்த நிர்வாக அதிகாரத்துக்குத்தான். அது தேவையான, நியாயமான போராட்டம். அதற்காக அவன் அந்த நிர்வாகத்தில் பிரதிநிதித்துவம் கேட்கவில்லை.

திலீபன் மறைந்ததும் ஜே.ஆர். நிப்பந்தங்களினால் அந்த இடைக்கால சபையை நிறுவிய போது, யார் இடம் பிடிப்பது என்ற குளறுபடிகளால் நிர்வாகம் நடைபெற முடியாமல் கரைந்தது.

பின்னாளில் அமைந்த வடக்கு, கிழக்கு மாகாணத்தும் கதையும் அதுதான். தேவை புறக்கணிக்கப்பட்டது.

அடுத்தது – பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் கைதிகள் யாவரும் உடனடியாக விடுவிக்கப்பட வேண்டும் என்பதே. சட்டங்கள் எவ்வளவு கொடூரமாயினும், ஒரு நாடு அதனை நியாயப்படுத்துவதற்கு தனது இறைமையைக் காரணம் காட்டி அந்த இறைமையில் அமையும் அதிகாரத்தில் மற்றைய நாடுகள் ஊடுருவல் தரக்கூடாது என்ற கடப்பாட்டையும் சுட்டிக் காட்டுகின்றன. தென்னமரிக்கா, ஆபிரிக்க நாடுகள்,



ஜனாதிபதி ஜே.ஆர்.

ஐரோப்பாவில் கூட இது சகஜம். ஏன் மியன்மாரில் ஆங் சாங் சுகியின் சிறைவைப்புக்கு எதிராக எவ்வளவு கண்டனங்கள் இருந்தும் நடப்பது என்ன? பாகிஸ்தானிலும் இது வித்தியாசம் அல்ல, அன்றில் காஷ்மீர் தீவிரவாதிகளுக்கு இந்தியாவில் நிலைமை வேறும் அல்ல.

ஒப்பந்தம் வந்தவுடன் சிறைக் கதவுகள் உடனடியாகவே திறக்கப்பட வேண்டும், அதன் அதிகாரம் எமக்கு முன்பு என்ற எதிர்பார்ப்பு உணர்ச்சிகளால் ஊட்டப்பட்டது. ஆயினும் ஒப்பந்தத்தின் அடிப்படையில் சட்டத்திற்கு உட்பட்டுத்தான் அவர்கள் விடுவிக்கப்படலாம் என்ற நடைமுறை விதிகள் நாட்டின் சட்டத்தில் உண்டு. இவை பாவிக்கப்பட்டு ஒப்பந்த நாளுக்கு முன் பயங்கரவாத தடைச் சட்டத்தின் அடிப்படையில் கைதியாக இருந்தவர்கள் பலர், குற்



பிரபாகரன்

றப்பத்திரங்கள் சுமத்தப்படாதவர்கள் நீதிமன்றத்தின் முன் ஆஜராக்கப்பட்டு உடனடியாக விடுவிக்கப்பட்டார்கள். குற்றப் பத்திரிகைகள் பெற்றவர்கள் சட்டமா அதிபரின் ஆலோசனைகளின் அனுமதியோடு குற்ற பத்திரங்கள் மீளப் பெறப்பட்டு விடுவிக்கப்பட்டார்கள். தண்டனை பெற்றோர் சட்ட ஆலோசர்களின் நீதிமன்ற சமர்ப்பிணங்களில், நீதிமன்றத்தினால் விடுதலை செய்யப்பட்டனர் அல்லது மன்னிப்பு வழங்கி விடுவிக்கப்பட்டனர். இவை நடைபெற்றன.

ஆனால் பின் நடந்தவைகளால் பயங்கரவாத தடை சட்டம் தொடர்ந்தது. அதில் கைதாகித் தண்டனை பெற்ற நூற்றுக்கும் குறைந்த கைதிகளை விடுவிக்க தமிழ் மக்களது அரசியல்வாதிகள் இன்றும் மாறி மாறிப் பாடுகிறார்கள். அதற்காக திலீபன் மறைந்து 35 வருடங்களின் பின்னும் அவர்களை விடுவித்துக் கொள்ள ஆளுமைகள் இல்லாமல் சட்டத்தையே மாற்ற இன்று வாகனப் பேரணிகள் நடத்தப்படுகின்றன. கடலை வற்ற வைக்கும் புத்தி.

தலைமைத்துவப் போட்டியே எல்லாம் இவற்றின் பின்புலமே ஒழிய, தமிழ் மக்களுக்கு தேவையான அதிகாரத்தை பெறுவதற்கான முயற்சி அல்ல என்ற உண்மை உணர்வுகள் தோன்ற வேண்டும்.

விடுதலைப் புலிகளில் பின்னால் எழுந்த கருத்து வேறுபாடுகளுக்கு இதே காரணமாகின.

அமிர்தலிங்கத்திற்கும் கூட்டணியினருக்கும் இந்தியாவுடன் இருந்த செல்வாக்கை – அவர்களுடன் ஈடுபட்டு நிலைமைகளை சமாளிக்கக்கூடிய நற்பெயரை, தகுதியை – வீழ்த்தி தாங்கள் அதனைத் தலைவர்களாக நடத்த வேண்டும் என்ற போட்டிகள் தமிழ் மக்களைத் திசை திருப்பி இன்று இந்த நிலைக்கு கொண்டு வந்தன என்பது ஒரு நிலை வாதம்.

அப்படி எனும் போது காணாமல் ஆக்கபட்டோர் சங்கத்தின் காரியதரிசி “தமிழர்களுக்கு தேவை இறையாண்மையே ஒழிய, பயங்கரவாதத் தடைச் சட்டத்தின் நீக்கம் அல்ல. இந்தியாவை நம்பி இருக்காதீர்கள். தமிழர்களுக்கு உதவ வாருங்கள் என்று ஒவ்வொரு தமிழனும் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தை அழைக்க வேண்டும்.” – என்றும் பகிரங்கப்படுத்துகிறார். இதுவும் ஒரு நிலை வாதம்.

திலீபனது நினைவு கூரலில் நடந்தவை இன்னொரு நிலை வாதம்.

இப்படியாக தமிழ் மக்களின் வாதங்களினாலேயே அவர்கள் முடங்கிக் கிடக்கிறார்கள்.

(வளரும்.....)

# பசுமை அமைதி விருதுகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

பொதுமக்கள் மத்தியில் சூழல் விழிப்புணர்வு, சூழற் கல்வி மற்றும் சூழல் பாதுகாப்புச் செயற்பாடுகளை ஊக்கு விக்கும் முகமாகத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் வழங்கிவரும் பசுமை அமைதி விருதுகளுக்கான இந்த ஆண்டுக்குரிய விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதுதொடர்பாகத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம் ஊடகங்களுக்கு அறிக்கையொன்றை அனுப்பி வைத்துள்ளது.

அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

காலநிலை மாற்றங்களும் கொரோனாப் பெருங்கொள்ளை நோயும் இயற்கையை நாம் அழித்தால் இயற்கையால் நாம் அழிவோம் என்ற வலுவான பாடத்தை எமக்குப் போதித்துள்ளன. இயற்கையை நாம் மென்மேலும் சூறையாடினால் பெரும் பிரளயத்துக்குள் உலகம் தள்ளப்படும் என்று ஐக்கிய நாடுகள் சபை தொடர்ந்து எச்சரித்து வருகிறது.

எனினும், இந்த எச்சரிக்கைகளைப் புறந்தள்ளி இயற்கைச் சூழலை நாம் அபிவிருத்தியின் பெயராலும் உலகமயமாக்கலின் பெயராலும் தொடர்ந்து சூறையாடி வருகிறோம்.

இந்தச் சூறையாடலை நிறுத்திச் சூழலுடன் ஒரு பசுமை அமைதி ஒப்பந்தத்தை உடனடியாகச் செய்து கொண்டால் மாத்திரமே பேரழிவில் இருந்து எம்மையும் பாதுகாத்து உலகத்தையும் காப்பாற்ற முடியும். இதனைக் கருத்திற்கொண்டு, பொதுமக்கள் மத்தியில் சூழல் விழிப்புணர்வு, சூழற் கல்வி மற்றும் சூழல் பாதுகாப்புச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் முகமாகத் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கம் ஆண்டுதோறும் மாணவர்களுக்கும் சிறந்த சூழற் செயற்பாட்டாளர் ஒருவருக்கும் பசுமை அமைதி விருதுகளை வழங்கிக் கௌரவித்து வருகின்றது.

மாணவர்களிடையே இந்த ஆண்டுக்கான பசுமை அமைதி விருதுக்குரியவர்களைத் தெரிவு செய்யும் பொருட்டு சூழல் பொது அறிவுப் பரீட்சை இணையவழியூடாக 16.10.2022 காலை 6 மணி தொடங்கி 7.30 மணிவரை நடைபெறவுள்ளது. இப்பரீட்சையில் தரம் 9 முதல் 13 வரை பயிலும் இலங்கையை வதிவிடமாகக் கொண்ட மாணவர்கள் எவரும் தோற்ற முடியும். தோற்ற விரும்பும் மாணவர்கள் www.tamilnationalgreen.org இணையத்தளத்தின் ஊடாக 05.10.2022 இற்கு முன்பாகப் பதிவுகளை மேற்கொள்ளுதல் வேண்டும்.

இப்பரீட்சையில் சித்தியடையும் அனைத்து மாணவர்களும் பசுமை அமைதிச் சான்றிதழ்கள் வழங்கிக் கௌரவிக்கப்படுவார்கள். இவர்களிலிருந்து முதல் 100 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டு பசுமை அமைதிச் சான்றிதலோடு சிறப்புப் பரிசுகளும் வழங்கிக் கௌரவிக்கப்படுவார்கள். இவர்களில் முதல் 3 மாணவர்கள் பசுமை அமைதிச் சான்றிதழ், சிறப்புப் பரிசுகளுடன் சூழலியல் ஆசான் க. சி. குகதாசன் ஞாபகார்த்த பசுமை அமைதி விருதுகளும் வழங்கிக் கௌரவிக்கப்படுவார்கள். முதலாம் இடத்தைப் பெறும் மாணவர் ஒரு பவுண் தங்கப் பசுமை அமைதி விருதும், இரண்டாம் இடத்தைப் பெறும் மாணவர் வெள்ளிப் பசுமை அமைதி விருதும், மூன்றாம் இடத்தைப் பெறும் மாணவர் வெண்கலப் பசுமை அமைதி விருதும் வழங்கிக் கௌரவிக்கப்படுவர்.

சூழல் பாதுகாப்பு மற்றும் சூழல் நேயச் செயற்பாடுகளில் பல ஆண்டுகளாகத் தீவிரமாக உழைத்து வரும் தனிநபர் ஒருவர் பொதுமக்கள் மற்றும் பொது அமைப்புகளின் பரிந்துரையில் தெரிவு செய்யப்பட்டு சிறந்த சூழற்செயற்பாட்டாளருக்கான தாலகாவலர் மு.க. கனகராசா ஞாபகார்த்த பசுமை அமைதி விருதும் ஒரு லட்சம் ரூபா பொற்கிளியும் வழங்கிக் கௌரவிக்கப்படுவார். இந்த ஆண்டுக்கான சிறந்த சூழற் செயற்பாட்டாளர் ஒருவரைப் பரிந்துரை செய்ய விரும்புபவர்கள் அவர் பற்றிய விவரங்களைத் தமிழ்த்தேசியப் பசுமை இயக்கம், இல. 109, அரசடி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்குத் தபால் மூலமாகவோ அல்லது greentamils5@gmail.com என்ற மின்னஞ்சல் மூலமாகவோ 31.10.2022 இற்கு முன்னர் அனுப்பி வைக்கவேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

# இலங்கை பன்மைத்துவ நாடாக மாறுவதற்கு புலம்பெயர்ந்து வாழும்மக்கள் உதவவேண்டும்!

## மனோ கணேசன் கோரிக்கை



இலங்கைபன்மைத்துவநாடுஎன்றநிலைக்கு சட்டப்படி மாறுவதிலேயே இலங்கையின் அரசியல், பொருளாதார, சமூக, கலாசார மீட்சி இருப்பதாக நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

ஆஸ்திரேலியாவில் வாழும் இலங் கையர்களுடனான சந்திப்பொன்றில் உரையாற்றிய போதே தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவர், நாடாளுமன்றஉறுப்பினர் மனோ கணேசன் இதனைக் கூறியுள்ளார்.

இலங்கையில் நாடு முழுவதும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்ட போது, அதற்கு ஆதரவாக உலகெங்கிலும் வாழும் புலம்பெயர் சிங்கள மக்களும் வீதிகளில் இறங்கிப் போராட்டம் நடத்தியதாக அவர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

அதேபோன்று இலங்கை ஒரு பன்மைத்துவ நாடாக சட்டபூர்வமாக மாறுவதற்கும் புலம் பெயர்ந்து வாழும் மக்கள் உதவ வேண்டும் எனநாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் கோரிக்கை விடுத்துள்ளார்.

# கட்டுநாயக்க விமான நிலையத்தில் சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி கைது!

சுமார் இரண்டு கோடி ரூபா பெறுமதியான ஒரு கிலோ கிராம் எடையுடன் கூடிய 8 தங்க பிஸ்கட்டுக்களை கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து வெளியில் எடுத்துச் செல்ல முயற்சித்த விமான நிலையத்தின் சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சுங்க திணைக்களத்தின் போதைப் பொருள் கட்டுப்பாட்டு பிரிவின் அதிகாரிகள் இந்த சந்தேக நபரை நேற்று (செவ்வாய்க்கிழமை) மதியம் கைது செய்துள்ளனர். களனி பிரதேசத்தை சேர்ந்த 40 வயதான அதிகாரியே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

டுபாயில் இருந்து நேற்று காலை வந்த இந்திய பிரஜை ஒருவர் இந்த தங்க பிஸ்கட்டுக்களை கட்டுநாயக்க விமான நிலையத்தின் ட்ரான்ஸ்சிட் பயணிகள் முனையத்தில் வைத்து, இந்த பாதுகாப்பு அதிகாரியிடம் வழங்கி இருக்கலாம் என சுங்க அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

தங்க பிஸ்கட்டுக்களை விமான நிலைய பாதுகாப்பு அதிகாரி தனது காற்சட்டை பைகளில் மறைத்து விமான நிலையத்தின் சுங்க விசாரணைப் பிரிவைக் கடந்து செயல்ல முயற்சித்த போதே சுங்க அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# முல்லை கடற்தொழிலாளர் வாழ்வாதாரங்கள் பாதிப்பு

முல்லைத்தீவு மாவட்டத்தில் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக எரிபொருள் தட்டுப்பாட்டால் கடற்தொழிலாளர்களின் தொழில் நடவடிக்கை பாதிக்கப்பட்டுள்ளதுடன், அவர்களின் வாழ்வாதாரமும் பாதிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடியால் கடற்தொழிலாளர்களின் குடும்பங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இன்று வரை கடற்தொழில் நடவடிக்கைக்கு உரிய வகையில் எரிபொருள் கிடைக்காத நிலையும் தொடர்வதாக முல்லைத்தீவு கடற்தொழிலாளர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

இது தொடர்பில் அவர்கள் மேலும் தெரிவிக்கையில் –

கடலை நம்பி இருக்கும் கடற்தொழிலாளர்களும், சிறுதொழிலாளர்களும் சுருக்குவலை மீன்பிடி நடவடிக்கையால் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனால் கடல்வளமும் அழிந்து கொண்டு செல்கின்றது.

வாரத்துக்கு ஒரு தடவை 20 லீற்றர் மண்ணெண்ணெய் தான் வழங்குகின்றார்கள்.

ஒரு லீற்றர் மண்ணெண்ணெய்யை 340 ரூபாவிற்கு வழங்குகின்றார்கள். ஒரு முறை தொழிலுக்கு போய்வர 20 லீற்றர் மண்ணெண்ணெய் தேவை.

சாதாரணமாக 20 லீற்றர் மண்ணெண்ணெயைப் பயன்படுத்தி ஒரு தடவை தொழில் செய்துவர ஒன்பதாயிரம் ரூபா செலவாகின்றது.

இவ்வாறு செலவு செய்து ஜீவனோபாயத்துக்கான வருமானம் கிடைக்குமா என்றால்



அது கேள்விக்குறியாகவே உள்ளது.

இப்போது சூடை, கும்பிளாமீனுக்குத்தான் போறம். இப்போது வாரத்தில் ஒரு நாளைக்கு போனால் 10 தொடக்கம் 20 கிலோகிராம் வரையில் தான் மீன் கிடைக்கின்றது.

வலைகளின் விலை அதிகரிப்பால் வலைகளை எடுத்து தொழில் செய்யமுடியாத நிலை காணப்படுகிறது. அத்துடன் கடற்தொழில் உபகரணங்களின் விலைகளும் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன.

ஒரு படகு இயந்திரம் தற்போது 10 லட்சம் ரூபா வரை அதிகரித்துள்ளது. அதற்கான உதிரிபாகங்களும் வரத்தில்லாததால் அவற்றுக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது.

இவ்வாறான நிலையில் கடற்தொழிலாளர்களின் வாழ்வாதாரம் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்துள்ளனர்.

நவராத்திரி சிறப்பம்சம்

# இவ்வுலகில் எம்மைக் காத்திடுவாய் அம்மா!



ஈரமுடை நெஞ்சை ஈந்திடுவாய் தாயே
இணையில்லா திருவடியைப் பற்றுகிறோம் தாயே
கோரமுடை நினைப்பைக் கொன்றொழிப்பாய் தாயே
குவலயதில் வாழத் துணைநீயே தாயே

ஆணவமாம் நினைப்பை அகற்றிவிடு தாயே
அகந்தை அகமேறா ஆக்கிவிடு தாயே
தீமையெமை அணுகா திருப்பிவிடு தாயே
திக்கெட்டும் நிறைந்தாய் துர்க்கையம்மா நீயே

சோர்வடையும் எண்ணம் துடைத்தெறிவாய் தாயே
தொலைநோக்குப் பார்வை கொடுத்தருள்வாய் தாயே
வாய்மையுடன் வாழ வரமருள்வாய் தாயே
மாநிலத்தில் எமக்குத் துணைநீயே தாயே

அச்சமதை அகற்ற அருகணைவாய் அம்மா
ஐயநிலை போக்க அருள்புரிவாய் அம்மா
இச்சைகொண்டு உன்னை இறைஞ்சுகிறோம் அம்மா
இவ்வுலகில் எம்மைக் காத்திடுவாய் அம்மா

மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா
மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர், மெல்பேண், அவுஸ்திரேலியா

## உயர் பாதுகாப்பு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
உயர்பாதுகாப்புவலயங்கள்பொருளாதாரத்திற்கு கடும் பாதிப்பை ஏற்படுத்தலாம் என பொருளாதார ஆலோசகர்கள் சிலர் ஜனாதிபதிக்கு ஆலோசனை வழங்கியுள்ளனர் எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.

ஜனாதிபதி ஜப்பான், பிலிப்பைன்ஸ் விஜயத்தை முடித்துக்கொண்டு நாடு திரும்பியவுடன் உயர் பாதுகாப்பு வலயம் தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் மீளப்பெறப்படலாம் என தகவல்கள் வெளியாகியுள்ளன.

இதேவேளை கொழும்பின் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக மாற்று பாதுகாப்பு திட்டமொன்று முன்வைக்கப்படலாம் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.புதிய திட்டம் புலனாய்வு பிரிவினரின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்படும் என்றும் கூறப்பட்டது.

## காலி முகத்திடலில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், அரச இரகசியங்கள் சட்டத்தின் படி பாதுகாப்பு வலயங்கள் அமைக்கப்பட்டுள்ளன. எனினும் இச்சட்டம் 67 வருடங்கள் பழமையானது. இது சட்ட விரோதமானச் செயற்பாடு. அமைச்சரவை இரகசியங்கள் போன்றவற்றைப் பாதுகாப்பதற்கே இச்சட்டம் உள்ளது. இதனூடாக பாதுகாப்பு வலயங்களை அமைக்க முடியாதென கூறினார்.

உயர் பாதுகாப்பு வலயங்களில் ஐஸ் கிறீம் கூட விற்பனை செய்பவருக்குக் கூட பிரச்சினைகள் வரலாம். காலி முகத்திடலில் சென்று இனி பட்டாசுகளைக்கூட கொளுத்த முடியாது. இதுபோன்ற நாடொன்றுக்கு சுற்றுலாப் பயணிகள் வருவார்களா? - எனவும் கேள்வி எழுப்பினார்.

## தெமட்டகொடவில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)
ரயில் சாரதி உறங்கியமையினால் ரயில் பாதை முடிவைத் தாண்டி ரயில் பயணித்து இந்த விபத்து இடம்பெற்றுள்ளதாக விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.


விபத்து குறித்து ரயில்வேத் திணைக்களத்தின் ஊடாக உள்ளக விசாரணை நடத்தி வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

விபத்தில் யாருக்கும் காயம் ஏற்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# தொட்டலங்காவில் நேற்று முன்னிரவு பெரும் தீ! 60 வீடுகள் எரிந்து நாசம்!!







கொழும்பு தொட்டலங்காவில் உள்ள கஜீமாவத்த அடுக்குமாடி குடியிருப்பில் நேற்று மாலை பெரும் தீ விபத்து ஏற்பட்டது. எனினும் நேற்றிரவு பலத்த போராட்டத்தின் பின்னர் தீ அணைக்கப்பட்டுள்ளது.

தீயை அணைக்க 12 தீயணைப்பு வாகனங்கள் அனுப்பி வைக்கப்பட்டன.

இந்த தீ விபத்தில் அறுபதுக்கும் மேற்பட்ட வீடுகள் முற்றிலும் எரிந்து நாசமாகியுள்ளன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

எவ்வாறாயினும், இந்த சோகமான சம்பவத்தில் உயிர்ச்சேதம் எதுவும் ஏற்படவில்லை.



காலைக்கதிர்
Kalaikkathir

# நுரைச்சோலை மின்னுற்பத்தி நிலைய பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள 5 நாள்கள் ஆகலாமாம்!

## அமைச்சர் காஞ்சன விஜேசேகர கூறுகிறார்



நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் பராமரிப்பு பணிகளை மேற்கொள்ள 3 முதல் 5 நாள்கள் வரை ஆகும் என மதிப்பிடப்பட்டுள்ளதாக அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்தார்.

பழுதுபார்க்கும் பணிகள் முடியும் வரை மின் உற்பத்தியை நிர்வகிக்க எரிபொருள் மின் நிலையங்கள் பயன்படுத்தப்படும் என்றும் அவர் கூறினார்.

தொழிநுட்பக் கோளாறு காரணமாக நுரைச்சோலை மின் உற்பத்தி நிலையத்தின் மூன்றாவது மின் உற்பத்தி இயந்திரம் பழுதடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# திருமணமாகி 17 நாள்களில் இளம் பெண் கொழும்பில் பலி!

## அறுவைச் சிகிச்சை தவறு என குற்றச்சாட்டு



கொழும்பு – வத்தளை பிரதேசத்தை சேர்ந்த இளம் பெண் ஒருவர் அறுவை சிகிச்சை தவறான காரணத்தால் உயிரிழந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கடந்த 17 நாள்களுக்கு முன்னர் திருமண பந்தத்தில் இணைந்து கொண்ட புத்திக்கா ஹர்ஷனி என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

வத்தளையில் உள்ள பிரபல தனியார் வைத்தியசாலையில் பித்தப்பை கல் அகற்றும் அறுவை சிகிச்சை செய்து கொள்வதற்காக சேர்க்கப்பட்டுள்ளார்.

அறுவை சிகிச்சையில் ஏற்பட்ட தவறு காரணமாக அவர் தீவிர சிகிச்சை பிரிவில் பல நாள்கள் உயிருக்குப் போராடி வந்துள்ளார். எனினும் சிகிச்சை பலனின்றி அவர் உயிரிழந்துள்ளார்.

இந்த நிலையில் உயிரிழந்த பெண்ணின் உறவு முறை சகோதரர் ஒருவர் இந்த சம்பவம் தொடர்பில் பேஸ்புக்கில் பதிவிட்டுள்ளார்.

அந்த பதிவில், 'இவர் எனது உறவு முறை சகோதரி புத்திக்கா ஹர்ஷனி தர்மவிக்ரம. இன்று (நேற்று) அவரது பிறந்த நாள் ஆனால் அவர் சவப்பெட்டியில் வீட்டுக்கு வந்துள்ளார். மருத்துவரின் தவறால் எங்கள் தேவதையை இழந்துவிட்டோம்' என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# முதலைகளின் நடமாட்டம் அம்பாறையில் அதிகரிப்பு!

## காணாமல்போகும் கால்நடைகள்





அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக வேளாண்மை செய்கை ஆரம்பமாகி உள்ள நிலையில் அதிகளவிலான முதலைகள் வெளியேறி மக்கள் குடியிருப்புகளுக்குள் செல்கின்றன.

தற்போது மாவடிப்பள்ளி பாலம், சம்மாந்துறை பகுதி, ஒலுவில் பகுதி, நிந்தவூர், மருதமுனை, பெரியநீலாவணை, நற்பிட்டிமுனை, பாண்டிருப்பு, கிட்டங்கி ,நாவிதன்வெளி உள்ளிட்ட பகுதிகளை அண்மித்த ஆற்றை விட்டு இரவிலும் பகலிலும் முதலைகள் வெளியேறுவதால் வீதியால் செல்லும் பயணிகள் மற்றும் பாதசாரிகள் அச்சத்துடனேயே பயணத்தை மேற்கொள்கின்றனர்.

குறிப்பாக இரவு நேரங்களில் அதிகமான சுமார் 9,5,4 அடி நீளமுடைய முதலைகள் வெளியேறுகின்றன என மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேலும் இந்த மாவட்டத்தில் உள்ளிட்ட களப்புக்கள் போன்ற இடங்களிலும் முதலை அச்சுறுத்தல் தொடர்ந்து வருகின்றன. மேற்படி பகுதிகளில் உள்ள வாவிகள் குளங்களிலும் முதலைகளின் பெருக்கம் அதிகரித்துக் காணப் படுகிறது.

மேலும் தற்போது சிறுபோக வேளாண்மை செய்கை ஆரம்பமாகி உள்ளமையால் வயல் நிலங்கள் கால்வாய்கள் அண்டிய பகுதியில் நீருக்காக குளங்களை நாடிச் செல்லும் ஆடு, மாடுகள் உள்ளிட்ட கால்நடைகள் முதலைகளினால் இரைக்குள்ளாகின்றது.

இப்பகுதியில் இரவிலும் பகலிலும் முதலைகள் வெளியேறுவதால் கட்டாக்காலிகளாக இப்பகுதியில் திரியும் மாடுகளே இந்த முதலைகளுக்கு இரையாகுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி பகுதிகளில் முதலைகளின் பெருக்கம் அதிகரித்து காணப்படுகிறதுடன் முதலைகளின் பெருக்கம் சம்பந்தமாக உரிய இடங்களில் அறிவுறுத்துதல்கள் எச்சரிக்கை பலகைகள் உரிய இடங்களில் இதுவரையும் வைக்கப்பட்டிருப்பதாகத் தெரியவில்லை. முதலை அபாயம் தெரியாமல் இந்தப் பகுதியில் பயணிப்பதால் முதலையின் பிடிக்குள் அகப்படும் சாத்தியம் உள்ளது. இதை உரிய அதிகாரிகள் கவனத்தில் எடுக்கவேண்டும் என மக்கள் கோரிக்கை விடுகின்றனர்.

மேலும் இந்த வருடம் ஜுன் மாத பகுதியில் அம்பாறை மாவட்டம் நிந்தவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட களியோடை ஆற்றின் ஓரத்தில் தனது வளர்ப்பு மாட்டுக்கு புல் வெட்டுவதற்காக சென்ற குடும்பஸ்தர் ஒருவர் முதலை தாக்கியதில் உயிர் இழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்ட சம்பவம் பதிவாகியுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

# போதைப் பொருள் கடத்தலை தடுத்து நிறுத்த நடவடிக்கை!

## பாதுகாப்பு செயலாளர் அதிரடி

வன்முறை சம்பவங்களில் ஈடுபட்டவர்கள் மற்றும் அதற்கு ஆதரவானவர்களுக்கு எதிராக சட்டம் கடுமையாக அமுல்படுத்தப்படும் என பாதுகாப்பு செயலாளர் கமல் குணரத்ன தெரிவித்தார்.

மேலும், வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்யப்படும் போதைப் பொருள் கடத்தலை தடுத்து நிறுத்தவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதேவேளை சமூக வலைதளங்களைத் தவறான பிரசாரங்களுக்கு பயன்படுத்துவதை தடுக்கும் வகையில் சட்டத்தை கொண்டு வருவது தொடர்பாகவும் ஆலோசிக்கப்பட்டதாக கமல் குணரத்ன தெரிவித்தார்.

பாதுகாப்பு விவகாரங்களுக்கான அமைச்சர்கள் ஆலோசனைக் குழுவின் முதலாவது கூட்டத்தில் கலந்து கொண்டு கருது தெரிவிக்கும்போதே பாதுகாப்பு செயலாளர் கமல் குணரத்ன மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

# திரிபோஷாவில் விசத்தன்மை குறித்து 2 நிறுவனங்கள் அறிக்கை சமர்ப்பிப்பு

திரிபோஷாவில் விசத்தன்மை உள்ளதாகக் கூறப்பட்டமை தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட 2 நிறுவனங்களின் அறிக்கைகள் எதிர்வரும் நாள்களில் கிடைக்கப்பெறவுள்ளன என திரிபோஷா நிறுவனம் தெரிவித்துள்ளது.

அதன்படி, கைத்தொழில் தொழில்நுட்ப நிறுவனம் மற்றும் அரச இரசாயன பகுப்பாய்வு திணைக்களத்தின் அறிக்கைகளே கிடைக்கவுள்ளன என அந்த நிறுவனத்தின் தலைவர் தீப்தி குலரத்ன தெரிவித்தார்.

அந்த அறிக்கைகள் கிடைத்ததன் பின்னர் திரிபோஷாவின் தரம் தொடர்பாக அறிவிக்கவுள்ளதாக அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே, உரிய குறியீட்டின்படி உற்பத்தி செய்யப்படும் திரிபோஷா சுகாதார வைத்திய அதிகாரிகளின் அலுவலகங்களுக்குத் தொடர்ச்சியாக விநியோகிக்கப்படும் என இலங்கை திரிபோஷா நிறுவனத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

# கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள இருவர் யாழ்ப்பாணத்தில் கைது!



யாழ்ப்பாணம், நெல்லியடி பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் 60 லீற்றர் கசிப்புடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வடமராட்சி முள்ளி காட்டுப் பகுதியில் கசிப்பு உற்பத்தி இடம்பெறுவதாக நெல்லியடி பொலிஸ் புலனாய்வு பிரிவினருக்குக் கிடைக்கப்பெற்ற இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்படி பகுதியை பொலிஸார் சுற்றிவளைத்து தேடுதல் நடத்தியுள்ளனர்.

இதன்போது, காட்டுப்பகுதிக்குள் கசிப்பு உற்பத்தியில் ஈடுபட்டு இருந்த 35 வயது மற்றும் 50 வயதுடைய இருவரை பொலிஸார் கைது செய்தனர்.

கைது செய்யப்பட்டவர்களிடம் இருந்து 60 லீற்றர் கசிப்பையும் கைப்பற்றியுள்ளனர். கைது செய்யப்பட்ட நபர்களை நெல்லியடி பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைத்து பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

# கோட்டாபயவின் போராட்டத் தளம் தவறான இடத்தில் அமைந்துள்ளது

## பாதுகாப்புச் செயலாளர் அறிவிப்பு



இலங்கையின் அப்போதைய ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவால் அறிமுகப்படுத்தப்பட்ட 'போராட்டத் தளம்' தவறான இடத்தில் உள்ளது என பாதுகாப்பு செயலாளர் ஓய்வுபெற்ற ஜெனரல் கமல் குணரத்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பில் உயர்பாதுகாப்பு வலயங்களைப் பிரகடனம் செய்தல் மற்றும் சட்டவிரோத போராட்டங்களுக்கு எதிராக பலத்தைப் பிரயோகிப்பது தொடர்பாக விளக்கமளிப்பதற்காக கொழும்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

போராட்ட தளம் தவறான இடத்தில் பிரகடனப்படுத்தப்பட்டது என்பதை தாங்கள் புரிந்து கொண்டோம் என்றும் வெளிநாட்டுத் தூதுவர்கள் பயன்படுத்தும் பல தங்குமிடங்களும் இந்த குறிப்பிட்ட இடத்தில் உள்ளன என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எவரும் காலி முகத்திடலில் பொழுது போக்கிற்காக நுழைவதில் எந்தப் பிரச்சினையும் இல்லை என்றும் பாதுகாப்புச் செயலாளர் கூறியுள்ளார்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 28.09.2022இல் வெளியிடப்பெற்றது.